1979 மார்ச் 9]

திருப்பூரில் தொழிற்பேட்டை.

*வினா எண் 314 — திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு கிராமத்தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், திருப்பூரில் ஒரு தொழிற் பேட்டை அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தால் தற்போது திருப்பூரில் பனியன் தொழிற்சாலைகளுக்காக ஒரு தொழிற்பேட்டை ஏற்படுத்தும் செயற் குறிப்பு நடைமுறையில் கொண்டுவரப் பட்டுள்ளது.

(ஆ) தொழிற்பேட்டை ஏற்படுத்துவதற்காக 10.137 ஏக்கர் நிலம் திருவாளர்கள் மதுரை கோட்ஸ் நிறுவனத்திடமிருந்து 4-12-1978 அன்று வாங்கப்பட்டுள்ளது. தொழிற் பேட்டைக் கான வரைபடம் நகர அமைப்புத் துறையினரால் ஒப்புக் கொள்ளப் பட்டுள்ளது. 30 தொழிற் கூடங்களைக் கட்டுவதற்காக கேட்கப் பட்டிருந்த ஒப்பந்தப் புள்ளிகள் இறுதியாக முடிவு செய்யப் பட்டுள்ளன. கூடிய விரைவில் இத்தொழிற்பேட்டை செயல் படத் துவங்கும்.

ஜோலார்பேட்டையில் பால் சேகரித்து வழங்கும் நிலையம்.

*வினா எண் 315— திரு. ரா. மார்க்கபந்து : மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் ஜோலார்ப்பேட்டையில் பீடர் டெய்ரி (Feeder Dairy) அமைக்கப்பட இருந்த திட்டம் சேலத்திற்கு மாற்றப்பட உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) ஜோலார் பேட்டையில் பால் சேகரித்து வழங்கும் நிலையம் அமைக்க முடிவான திட்டம் ஏதும் இருந்ததில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.